©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 8.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 29] சென்னை, புதன்கிழமை, ஜூலை 15, 2020
ஆனி 31, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை(நிலை) எண். 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 22.01.2020]*

1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1961) 40 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகளில் வெளியிடக் கருதியுள்ள திருத்தங்களின் கீழ்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 40 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இது தொடர்பாக அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு முன்னர் வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்று, இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை தொழிலாளர் துறை ஆணையாளர், சென்னை – 600 006, வாயிலாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 35, 46 மற்றும் 48 ஆம் விதிகள் நீக்கப்பட வேண்டும்;

(2) 38 ஆம் விதிக்குப் பதிலாக, பின்வரும் விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"38 (1) (a) வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் கீழ்காணும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும்–

(i) படிவம் XXIII–இல் பணியாளர் பதிவேடு ஒன்று.

(ii) படிவம் XXIV–இல் வேலைவாய்ப்புப் பதிவேடு ஒன்று.

(iii) படிவம் XXV–இல் ஊதியங்கள் பதிவேடு ஒன்று.

(iv) படிவம் XXVI–இல் விடுப்பு மற்றும் சமூக பாதுகாப்பு சலுகைகள் பதிவேடு ஒன்று.

(b) பகுதி (a) இல் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் மின்னணு வடிவில் அல்லது கையேடு வடிவில் பராமரிக்கப்பட வேண்டும்.

(c) பகுதி (a) இல் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் மின்னணு வடிவில் பராமரிக்கப்படும் போது, பதிவேட்டின் நெடும்பத்திகளின் பிரிவு, தொடர் எண் மற்றும் பொருளடக்கங்களின் முழுமை மாற்றாமல் பதிவேடுகளின் வடிவமைப்பு மற்றும் அளிக்கும் முறையை சரிசெய்யப்படலாம்.

(2) இந்த விதிகளின் விதித்துறைகளின் கீழ் பராமரிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் பதிவேடுகள், ஆவணங்கள், அறிவிப்புகள் இந்த தொழில் நிறுவனத்தில் எப்போதும் கிடைக்கும் என்பதுடன், அதிகார வரம்பெல்லையிலுள்ள யாதொரு ஆய்வாளரால் தேவையான அனைத்து நேரங்களிலும் ஆய்வு செய்வதற்காக இவற்றை அளிக்க வேண்டும் அல்லது அளிக்கும்படி செய்ய வேண்டும்.

இருப்பினும், இந்த விதிகளின் விதித்துறைகளின் கீழ் பதிவேடுகள், ஆவணங்கள், பராமரிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் அறிவிப்புகள் அவசியமென ஆய்வாளர் கருதுவராயின், அவரது அலுவலகத்தில் அல்லது அவரால் குறிப்பிட்டவாறான அத்தகைய ஏனைய பொது இடத்தில் ஆய்விற்காக ஒப்படைக்க வேண்டும் அல்லது அவ்வாறு ஆய்விற்காக அளிக்கப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள், அறிவிப்புகள், அதே நாளில் அவை திருப்பியளிக்கப்பட வேண்டும். யாதொரு நேர்விலும் வேலையளிப்பவர் ஒரு இரசீது வழங்கியபின்னர் ஏழு நாட்களுக்கு மேல் அவை இருத்தி வைக்கப்படக்கூடாது.

(3) துணை விதி (1) இன் (அ) பகுதியில் குறிப்பிடப்பட்ட படிவங்களிலுள்ள பதிவேடுகளின் கீழ் குறிப்பிடப்பட்ட பணியாளர் வருகைப் பதிவேடுகளின் நோக்கங்களுக்காக வழங்குவதற்குக் கருதிப்பார்க்கப்படும். அவையாவன:—

(i) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தொழிலகப் பணியாளர் அமைப்பு விதிகளின் (தேசிய, பண்டிகைக்கால மற்றும் சிறப்பு விடுமுறைகள்) 7 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (1) இன் படி, படிவம் VI இல் உள்ள தேசிய மற்றும் பண்டிகைக்கால விடுமுறைகளுக்கான பதிவேடு;

(ii) தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு பேறுக்காலச் சலுகை விதிகளின் 3 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (1) இன் படி, படிவம் A இல் உள்ள பணியாளர் வருகைப் பதிவேடு;

(iii) படிவம் I இல் உள்ள அபராதங்களுக்கான பதிவேடு, 21 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (4) இன் படி படிவம் II இல் பணியமர்த்தப்பட்ட நபரின் கவனக்குறைவு அல்லது தவறுகளுக்காக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்காக பிடித்தங்கள் குறித்த பதிவேடு, 26 ஆம் விதியின் துணை விதி (2) இன் படி படிவம் IV இல் உள்ள பணியாளர்களுக்கான மிகைப்பணி நேரப் பதிவேடு, 27 ஆம் விதியின் துணை விதி (5) இன் படி படிவம் V இல் உள்ள வருகைப்பதிவேடு, 1953 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளின் 27 (6) ஆம் விதியின் துணை விதி (6) இன் படி படிவம் XI இல் உள்ள பணியாளர்களின் பதிவேடு;

(iv) 3 ஆம் விதியின் படி படிவம் I இல் உள்ள அபராதங்களுக்கான பதிவேடு, 4 ஆம் விதியின் இன் படி படிவம் II இல் பணியமர்த்தப்பட்ட நபர்களின் கவனக்குறைவு அல்லது தவறுகளுக்காக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகளின் 17 ஆம் விதியின் படி படிவம் III இல் உள்ள முன்பணங்கள் பதிவேடு;

(v) படிவம் B இல் உள்ள ஊதியங்கள் பதிவேடு, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளின் 29 ஆம் விதியின் படி படிவம் C இல் உள்ள செலுத்தப்படாத மற்றும் அபராதங்கள் வகையில் திரண்ட தொகைகளுக்கான பதிவேடு;

(vi) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழிலகப் பணியாளர் அமைப்பு விதிகளின் (வேலையாட்களுக்கு நிரந்தர தகுதிநிலையை வழங்குதல்) 6 ஆம் விதியின் துணை விதி (1) இன் படி படிவம் I இல் உள்ள வேலையாட்களின் பதிவேடு;

(vii) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பிழைப்பூதியப் படி வழங்கல் விதிகளின் 3 ஆம் விதியின் படி படிவம் I இல் பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் பதிவேடு.'';

(3) படிவங்கள் XV, XX, XXII ஆகியவை நீக்கப்பட வேண்டும்;

(4) படிவ எண் XXII நீக்கப்பட்ட பின்னர், பின்வரும் படிவங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:—

“படிவ எண்.– XXIII

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (1) இன் (a) ஆம் பகுதியின் உட் – பகுதி (i) ஐக் காண்க

தமிழ்நாடு **1965** ஆம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள்

பணியாளர் பதிவேடு

மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி

பதிவு சான்றிதழ் எண்:

| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பணியாளர் அடையாள எண் | பாலினம் | தந்தை / கணவன் / மனைவி பெயர் | பிறந்த நாள் | பணியில் சேர்ந்த நாள் | பதவிப்பெயர் | தற்போதைய முகவரி | நிரந்தர முகவரி | EPF - UAN | ESIC எண் | ஆதார் எண் | பணியில் சேர்ந்து **480** நாட்கள் நிறைவடையும் நாள் | பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் | பணி இடைநீக்கம் செய்யப்பட்ட காலம் (ஏதேனுமிருப்பின்) | வங்கி கணக்கு எண், வங்கியின் பெயர், கிளை (IFSC) | புகைப்படம் | அலைப்பேசி எண் | மின்னஞ்சல் முகவரி | மாதிரி கையொப்பம் / பெருவிரல் கைரேகை | பணியிலிருந்து வெளியேறிய நாள் | பணியிலிருந்து வெளியேற்றத்திற்கான காரணம் | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

“படிவ எண்.– XXIV

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி **(1)** இன் **(a)** ஆம் பகுதியின் உட் – பகுதி (ii) ஐக் காண்க

தமிழ்நாடு **1965** ஆம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள்

வேலைவாய்ப்புப் பதிவேடு

**...............** லிருந்து ................ காலத்திற்காக

மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:

பணியாளரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளர் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு சான்றிதழ் எண்:

தேசிய மற்றும் பண்டிகைக்கால விடுமுறைகள்

ஒப்புதல் செயல்முறை எண் & நாள்:

ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய மற்றும் பண்டிகைக்கால விடுமுறைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| | | | | |

| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பணியாளரின் அடையாள அட்டை எண் | வேலையை தொடங்கும் நேரம் | ஓய்வு இடைவேளை | வேலை முடிவடையும் நேரம் | மிகைப்பணி நேரம் உட்பட நாள்தோறும் வேலை செய்யும் நேரங்கள் (ஏதேனுமிருப்பின்)* | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | வேலை செய்த மொத்த நாட்கள் | வேலை செய்த மொத்த நேரங்கள் | ஊதியமில்லா விடுப்பெடுத்த மொத்த நாட்கள் | தேசிய விடுமுறையில் வேலை செய்ததற்காக பெறப்பட்ட ஆதாயம் (**) | பண்டிகை விடுமுறையில் வேலை செய்ததற்காக பெறப்பட்ட ஆதாயம் (**) | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

*பயன்படுத்தப்பட்ட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H – வாராந்திர விடுமுறை

FH – பண்டிகைக்கால விடுமுறை

NH – தேசிய விடுமுறை

EL – ஈட்டிய விடுப்பு

ML – மருத்துவ விடுப்பு

HW – ஊதியத்துடன் கூடிய விடுப்பு

MBL – மகப்பேறு விடுப்பு

SH – ஈடு செய் விடுப்பு

SP – பணியிடைநீக்கம்

LOP – ஊதியமில்லா விடுப்பு

**பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H – அனுமதிக்கப்பட்ட விடுமுறை நாட்களுக்காக

W/D – இரட்டை ஊதியத்தில் வேலை செய்ததற்காக

W/H – விடுமுறை நாள் அன்று பணிசெய்ததற்காக

'N/E' – ஊதியம் பெற தகுதியில்லை எனில்,

படிவ எண்.– XXV

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி **(1)** இன் (a) ஆம் பகுதியின் உட் – பகுதி (iii) ஐக் காண்க

தமிழ்நாடு **1965** ஆம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள்

ஊதியங்கள் பதிவேடு

மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:

பணியமர்த்தப்பட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை

பணியாளரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளர் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு சான்றிதழ் எண்:

| ஆண் | பெண் | வளரிளம் பருவ ஆண் | வளரிளம் பருவ பெண் |
|---|---|---|---|
| | | | |



--------------- லிருந்து ----------------- காலம் வரையிலான ஊதியம்

(மாதாந்திரம் / இரண்டு வாரங்கள்/ வாராந்திரம் / நாள்தோறும் / செய்யும் வேலைக்கேற்ப ஊதியம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | தொடர் எண் | | |
| | | 2 | பணியாளரின் பெயர் | | |
| | | 3 | பணியாளரின் அடையாள அட்டை எண் | | |
| | | 4 | பணி செய்த மொத்த நாட்கள் | | |
| | | 5 | அடிப்படை ஊதியம் | | |
| | | 6 | அகவிலைப்படி | | |
| | | 7 | வீட்டு வாடகைப்படி | | |
| | | 8 | ஏனைய படிகள் (தன்மையை குறிப்பிடவும்) | | |
| | | 9 | மிகைப்பணி நேர ஊதியங்கள் | | |
| | | 10 | விடுப்பு ஊதியங்கள் (ஈட்டிய விடுப்பிற்காக பெறப்பட்ட ஊதியம் / NFH க்கான இரட்டை ஊதியம் / திரண்ட விடுப்பிற்கான ஊதியம்) | | |
| | | 11 | மொத்த ஊதியங்கள் | | |
| | | 12 | வருங்கால வைப்பு நிதி | | பிடித்தங்கள் |
| | | 13 | பணியாளர்களின் மாநில காப்புறுதி | | பிடித்தங்கள் |
| | | 14 | தொழிலாளர் நல நிதி | | பிடித்தங்கள் |
| | | 15 | வழங்கப்பட்ட முன்பணம் | முன்பணங்கள் | பிடித்தங்கள் |
| | | 16 | மாத தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலிருந்த முன்பணம் | முன்பணங்கள் | பிடித்தங்கள் |
| | | 17 | வசூலிக்கப்பட்ட முன்பணம் | முன்பணங்கள் | பிடித்தங்கள் |
| | | 18 | வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை | முன்பணங்கள் | பிடித்தங்கள் |
| | | 19 | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் விதிக்கப்பட்ட பிடித்தம் | சேதங்கள் /அபராதங்கள் | பிடித்தங்கள் |
| | | 20 | மாதத்தின் தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலுருந்த பிடித்தத் தொகை | சேதங்கள் /அபராதங்கள் | பிடித்தங்கள் |
| | | 21 | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் பிடித்தம் | சேதங்கள் /அபராதங்கள் | பிடித்தங்கள் |
| | | 22 | நிலுவையிலுள்ள வசூலிக்கப்பட வேண்டிய தொகை | சேதங்கள் /அபராதங்கள் | பிடித்தங்கள் |
| | | 23 | ஏனைய யாதொரு பிடித்தங்கள் | | பிடித்தங்கள் |
| | | 24 | மொத்த பிடித்தங்கள் | | பிடித்தங்கள் |
| | | 25 | நிகர பிடித்தங்கள் | | |
| | | 26 | தொகை செலுத்தப்பட்ட நாள் | | |
| | | 27 | செலுத்தப்படாத திரண்ட தொகை | | |
| | | 28 | கணக்கிடப்பட்ட பிழைப்பூதியப் படியின் விகிதம் மற்றும் செலுத்தப்பட்ட தொகை | | |
| | | 29 | பணியாளரின் இரசீது / வங்கி பரிவர்த்தனை எண் / நாள் | | |
| | | 30 | குறிப்புரைகள் | | |

படிவ எண்.– XXVI

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி **(1)** இன் (a) ஆம் பகுதியின் உட் – பகுதி (iv) ஐக் காண்க

தமிழ்நாடு **1965** ஆம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள்

விடுப்பு மற்றும் சமூக பாதுகாப்பு சலுகைகள் பதிவேடு

மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:

பணியாளரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளர் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு சான்றிதழ் எண்:

–––––––––––––– மாதம் ––––––––––––– ஆண்டிற்காக

| | | | ஈட்டிய விடுப்பு | | | | மருத்துவ விடுப்பு | | | ஏனைய விடுப்பு | | | மகப்பேறு பயன்கள் | | | | | பணிக்கொடை பயன்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பணியாளர் அடையாள அட்டை எண் | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | அந்த கால அளவில் ஈட்டிய விடுப்பு | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | மாதத்தின் இறுதியில் நிலுவையிலிருந்த விடுப்பு | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | மாதத்தின் முடிவில் நிலுவையிலிருந்த விடுப்பு | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | மாதத்தின் முடிவில் நிலுவையிலிருந்த விடுப்பு | கருவுற்ற நிலை / பிரசவம் குறித்த அறிவிப்பு அளிக்கப்பட்ட நாள் | மகப்பேறினை எதிர்பார்த்து அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மகப்பேறு உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட மகப்பேறு உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | மருத்துவ ஊக்கத் தொகையாக வழங்கப்பட்ட தொகை மற்றும் வழங்கப்பட்ட நாள் | **1961** ஆம் ஆண்டு மருத்துவ ஊக்கத் தொகை சட்டத்தின் **9** அல்லது **10** ஆம் பிரிவின் கீழ் ஊதியத்துடன் கூடிய விடுப்பு | பணியாளரிடமிருந்து நியமனம் பெறப்பட்டதா | பணியாளரின் வெளியேற்றம் அல்லது இறப்பு குறித்த நேர்வில் பணிக்கொடையாக வழங்கப்பட்ட தொகை | குறிப்புரைகள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்*

*(தமிழாக்கம்)*

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை*

## அறிவிக்கை

*[அரசாணை(நிலை) எண் .28, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 13.02.2020]*

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு (தமிழ்நாடு சட்டம் 13 / 1958) உணவக நிறுவனங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். அவையாவன:–

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 19 ஆம் விதி விட்டுவிடப்பட வேண்டும்;

(2) 38 ஆம் விதியின் துணை விதி (1)க்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(1) (a) வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் கீழ்காணும் பதிவேடுகளைப் வைத்துவர வேண்டும்–

(i) படிவம் XIX – இல் பணியாளர் பதிவேடு ஒன்று.

(ii) படிவம் XX – இல் வேலைவாய்ப்புப் பதிவேடு ஒன்று.

(iii) படிவம் XXI – இல் ஊதியங்கள் பதிவேடு ஒன்று.

(iv) படிவம் XXII – இல் விடுப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு பயன்கள் பதிவேடு ஒன்று.

(b) பகுதி (a) – இல் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள், மின்னணு வடிவில் அல்லது பணியாளரால் வைத்துவரப்பட வேண்டும்.

(c) பகுதி (a) – இல் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் மின்னணு வடிவில் வைத்துவரப்படும் போது, பதிவேட்டின் நெடும்பத்திகளின் பிரிவு, தொடர் எண் மற்றும் பொருளடக்கங்களை மாற்றாமல் பதிவேடுகளின் வடிவமைப்பும் முன்வைத்தலும் சரிசெய்யப்படலாம்.

(d) பகுதி (a) – இல் குறிப்பிடப்பட்ட படிவங்களிலுள்ள பதிவேடுகள், கீழே குறிப்பிடப்பட்ட பதிவேடுகள் மற்றும் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியலின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கருதப்படலாம். அவையாவன:–

(i) தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு பேறுக்காலச் சலுகை விதிகளின் 3 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (1) இன் படி, படிவம் A –இல் உள்ள தற்காலிகப் பணியாளர் வருகைப் பட்டியல்;

(ii) படிவம் I இல் உள்ள அபராதங்களுக்கான பதிவேடு, 21 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (4) இன் படி, படிவம் II - இல் உள்ள பணியமர்த்தப்பட்ட நபர்களின் கவனக்குறைவு அல்லது தவறு காரணமாக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, 26 ஆம் விதியின் துணை விதி (2) – இன் படி படிவம் IV இல் உள்ள பணியாளர்களுக்கான மிகைப்பணி நேரப் பதிவேடு, 27 ஆம் விதியின் துணை விதி (5) இன் படி படிவம் V – இல் உள்ள தற்காலிகப் பணியாளர் வருகைப் பட்டியல், 1953 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளின் 27 ஆம் விதியின் துணை விதி (6) இன் படி படிவம் XI இல் உள்ள பணியாளர்கள் குறித்த பதிவேடு;

(iii) 3 ஆம் விதியின் படி படிவம் I - இல் உள்ள அபராதங்களுக்கான பதிவேடு, 4 ஆம் விதியின் இன் படி படிவம் II - இல் பணியமர்த்தப்பட்ட நபர்களின் கவனக்குறைவு அல்லது தவறு காரணமாக வேலையளிப்பவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகளின் 17 ஆம் விதியின் படி படிவம் III - இல் உள்ள முன்பணங்கள் பதிவேடு;

(iv) படிவம் B இல் உள்ள ஊதியங்கள் குறித்த பதிவேடு, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளின் 29 ஆம் விதியின் படி படிவம் C இல் உள்ள செலுத்தப்படாத அபராதங்கள் மற்றும் சேர்ந்து வந்த தொகைகளுக்கான பதிவேடு;

(v) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழிலக நிறுவனங்கள் (வேலையாட்களுக்கு நிரந்தர தகுதிநிலை வழங்குதல்) விதிகளின் 6 ஆம் விதியின் துணை விதி (1)– இன் படி, படிவம் I - இல் உள்ள வேலையாட்கள் குறித்த பதிவேடு;

(vi) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பிழைப்பூதியப் படி வழங்கல் விதிகளின் 3 ஆம் விதியின் படி படிவம் I – இல் உள்ள பணியிடைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் குறித்த பதிவேடு.";

(3) படிவங்கள் "IV– F", "XIV", "XVI" மற்றும் "XVIII "ஆகியவை விட்டுவிடப்பட வேண்டும்;

(4) படிவ எண் XVIII அவ்வாறு விட்டுவிடப்பட்ட பின்னர், பின்வரும் படிவங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

"படிவம்.– XIX

பணியாளர் குறித்த பதிவேடு

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி **(1)** (a) – ஐக் காண்க

உணவக நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி

பதிவு சான்றிதழ் எண்:

| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பணியாளர் அடையாள எண் | பாலினம் | தந்தை / கணவன் (அ) மனைவி பெயர் | பிறந்த நாள் | பணியில் சேர்ந்த நாள் | பதவிப்பெயர் | தற்போதைய முகவரி | நிரந்தர முகவரி | தொழிலாளர் வருங்கால வைப்புநிதி – UAN | தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் எண் | ஆதார் எண் | பணியில் சேர்ந்து **480** நாட்கள் நிறைவடையும் நாள் | பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் | பணி இடைநீக்கம் செய்யப்பட்ட காலம் (ஏதேனுமிருப்பின்) | வங்கி கணக்கு எண், வங்கியின் பெயர், கிளை (IFSC) | புகைப்படம் | அலைப்பேசி எண் | மின்னஞ்சல் முகவரி | மாதிரி கையொப்பம் / கைப்பெருவிரல் கைரேகை அச்சு | பணியிலிருந்து வெளியேறிய நாள் | பணியிலிருந்து வெளியேறியதற்கான காரணம் | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

“படிவம்.– XX

வேலைவாய்ப்புப் பதிவேடு

38 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (1) (a) –ஐக் காண்க

.............................. லிருந்து .............................. வரையிலான காலத்திற்கானது

உணவக நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:

வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு சான்றிதழ் எண்:

தேசிய மற்றும் பண்டிகைக்கால விடுமுறைகள்

அலுவலக செயல்முறை ஆணைகள் எண் & நாள்:

ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய மற்றும் பண்டிகைக்கால விடுமுறைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பணியாளரின் அடையாள அட்டை எண் | வேலையை தொடங்கும் நேரம் | ஓய்வு இடைவேளை | வேலை முடிவடையும் நேரம் | மிகைப்பணி நேரம் உட்பட நாள்தோறும் வேலை செய்யும் நேரங்கள் (ஏதேனுமிருப்பின்)* | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | வேலை செய்த மொத்த நாட்கள் | வேலை செய்த மொத்த நேரங்கள் | ஊதியமில்லா விடுப்பெடுத்த மொத்த நாட்கள் | தேசிய விடுமுறை நாளில் வேலை செய்ததற்காக பெறப்பட்ட ஆதாயம் (**) | பண்டிகை விடுமுறை நாளில் வேலை செய்ததற்காக பெறப்பட்ட ஆதாயம் (**) | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

*பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H – வாராந்திர விடுமுறை

FH – பண்டிகைக்கால விடுமுறை

NH – தேசிய விடுமுறை

EL – ஈட்டிய விடுப்பு

ML - மருத்துவ விடுப்பு

HW – ஊதியத்துடன் கூடிய விடுமுறை

MBL – மகப்பேறு விடுப்பு

SH – ஈடு செய் விடுமுறை

SP – பணியிடைநீக்கம்

LOP – ஊதியமில்லா விடுப்பு

**பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H – அனுமதிக்கப்பட்ட விடுமுறை நாட்களுக்கு

W/D – இரட்டை ஊதியத்தில் வேலை செய்ததற்கு

W/H – விடுமுறை நாள் அன்று பணிசெய்ததற்கு

‘N/E’ – ஊதியம் பெற தகுதியில்லை எனில்,

படிவம்.– XXI

ஊதியங்கள் பதிவேடு

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி **(1)** (a) **–** ஐக் காண்க

உணவக நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:

பணியமர்த்தப்பட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை

| ஆண் | பெண் | வளரிளம் பருவ ஆண் | வளரிளம் பருவ பெண் |
|---|---|---|---|
| | | | |

வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு சான்றிதழ் எண்:

-------------- லிருந்து ---------------- காலம் வரையிலான ஊதிய காலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | தொடர் எண் | | | | |
| 2 | பணியாளரின் பெயர் | | | | |
| 3 | பணியாளரின் அடையாள அட்டை எண் | | | | |
| 4 | பணி செய்த மொத்த நாட்கள் | | | | |
| 5 | அடிப்படை ஊதியம் | | | | |
| 6 | அகவிலைப்படி | | | | |
| 7 | வீட்டு வாடகைப்படி | | | | |
| 8 | ஏனைய படிகள் (தன்மையை குறிப்பிடவும்) | | | | |
| 9 | மிகைப்பணி நேர ஊதியங்கள் | | | | |
| 10 | விடுப்பு ஊதியங்கள் (ஈட்டிய விடுப்பிற்காக பெறப்பட்ட ஊதியம் / NFH க்கான இரட்டை ஊதியம் / திரண்ட விடுப்பிற்கான ஊதியம்) | | | | |
| 11 | மொத்த ஊதியங்கள் | | | | |
| 12 | வருங்கால வைப்பு நிதி | | பிடித்தங்கள் | | |
| 13 | தொழிலாளர் மாநில காப்புறுதி | | பிடித்தங்கள் | | |
| 14 | தொழிலாளர் நல நிதி | | பிடித்தங்கள் | | |
| 15 | வழங்கப்பட்ட முன்பணம் | முன்பணங்கள் | பிடித்தங்கள் | | |
| 16 | மாத தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலிருந்த முன்பணம் | முன்பணங்கள் | பிடித்தங்கள் | | |
| 17 | வசூலிக்கப்பட்ட முன்பணம் | முன்பணங்கள் | பிடித்தங்கள் | | |
| 18 | வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை | முன்பணங்கள் | பிடித்தங்கள் | | |
| 19 | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் விதிக்கப்பட்ட பிடித்தம் | சேதங்கள் / அபராதங்கள் | பிடித்தங்கள் | | |
| 20 | மாதத்தின் தொடக்கத்தில் வசூலிக்காமல் நிலுவையிலுருந்த பிடித்தத் தொகை | சேதங்கள் / அபராதங்கள் | பிடித்தங்கள் | | |
| 21 | சேதங்கள், இழப்புகள் அல்லது அபராதங்கள் வகையில் பிடித்தம் | சேதங்கள் / அபராதங்கள் | பிடித்தங்கள் | | |
| 22 | நிலுவையிலுள்ள வசூலிக்கப்பட வேண்டிய தொகை | சேதங்கள் / அபராதங்கள் | பிடித்தங்கள் | | |
| 23 | ஏனைய யாதொரு பிடித்தங்கள் | | பிடித்தங்கள் | | |
| 24 | மொத்த பிடித்தங்கள் | | பிடித்தங்கள் | | |
| 25 | நிகர ஊதியங்கள் | | | | |
| 26 | தொகை செலுத்தப்பட்ட நாள் | | | | |
| 27 | செலுத்தப்படாத சேர்ந்து வந்த தொகை | | | | |
| 28 | கணக்கிடப்பட்ட பிழைப்பூதியப் படியின் விகிதம் மற்றும் செலுத்தப்பட்ட தொகை | | | | |
| 29 | பணியாளரின் இரசீது / வங்கி பரிவர்த்தனை எண் / நாள் | | | | |
| 30 | குறிப்புரைகள் | | | | |

படிவ எண்.– XXII

விடுப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு பயன்கள் பதிவேடு

**38** ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி **(1) (a)** – ஐக் காண்க

உணவக நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:

வேலையளிப்பவர் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின் / பொறுப்பாளரின் பெயர்:

பதிவு சான்றிதழ் எண்:

-------------- ஆண்டின் ------------- மாதத்திற்காக

| | | | ஈட்டிய விடுப்பு | | | | மருத்துவ விடுப்பு | | | ஏனைய விடுப்பு | | | மகப்பேறு பயன்கள் | | | | | பணிக்கொடை பயன்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பணியாளர் அடையாள அட்டை எண் | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | அந்த கால அளவில் ஈட்டிய விடுப்பு | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | மாதத்தின் இறுதியில் நிலுவையிலிருந்த விடுப்பு | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | மாதத்தின் முடிவில் எஞ்சியுள்ள விடுப்பு | மாதத்தின் தொடக்கத்திலிருந்த விடுப்பு | அந்த மாதத்தின் போது எடுக்கப்பட்ட விடுப்பு | மாதத்தின் முடிவில் நிலுவையிலிருந்த விடுப்பு | கருவுற்ற நிலை / பிரசவம் குறித்த அறிவிப்பு அளிக்கப்பட்ட நாள் | மகப்பேறினை எதிர்பார்த்து அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மகப்பேறு உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட மகப்பேறு உதவித் தொகை மற்றும் தொகை வழங்கப்பட்ட நாள் | மருத்துவ ஊக்கத் தொகையாக வழங்கப்பட்ட தொகை மற்றும் வழங்கப்பட்ட நாள் | **1961** ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் **9** அல்லது **10** ஆம் பிரிவின் கீழ் ஊதியத்துடன் கூடிய விடுப்பு | பணியாளரிடமிருந்து நேமகம் பெறப்பட்டதா இல்லையா | பணியாளரின் வெளியேற்றம் அல்லது இறப்பு குறித்த நேர்வில் பணிக்கொடையாக வழங்கப்பட்ட தொகை | குறிப்புரைகள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை(நிலை) எண் . 38, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 25.02.2020]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **30** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, **1953** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளில் செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்கள், இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் **30**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் கோரியுள்ளவாறாக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–**600 006**–இல் உள்ள தொழிலாளர் ஆணையாளர் வாயிலாக, அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–**600 009** என்ற முகவரிக்கு (இரு படிகளில்) அனுப்பி வைக்க வேண்டும்.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,—

(1) விதி **21**–இன், துணை விதி **(4)**–இல், இரண்டாவது வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

''மேலும், படிவங்கள் I மற்றும் II- இல் வைத்து வரப்பட வேண்டிய விவரங்கள், ஏனைய யாதொரு தொழிலாளர் சட்டத்தின் கீழ் வேலையளிப்பவரால் வைத்து வரப்படும் ஏனைய யாதொரு பதிவுருக்களில் இருக்குமாயின், தனியாக படிவங்கள் I மற்றும் II இல் பதிவேடுகள் வைத்து வரத் தேவையில்லை.''.

(2) விதி **26** –இன், துணை விதி **(2)** இல், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

''ஆனால், படிவம் IV இல் வைத்து வரப்பட வேண்டிய விவரங்கள், ஏனைய யாதொரு தொழிலாளர் சட்டத்தின் கீழ், வேலையளிப்பவரால் வைத்து வரப்படும் ஏனைய யாதொரு பதிவுருக்களில் இருக்குமாயின், தனியாக படிவம் IV இல் பதிவேடுகள் வைத்துவரத் தேவையில்லை.''.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்,
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை(நிலை) எண். 39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 25.02.2020]*

**1961** ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **53/1961**) **28** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, **1967** ஆம் ஆண்டு தமிழ்நாடு பேறுகாலச் சலுகை விதிகளில் செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தம், இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் **28**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் கோரியுள்ளவாறாக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–**600 006**–இல் உள்ள தொழிலாளர் ஆணையாளர் வாயிலாக, அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–**600 009** என்ற முகவரிக்கு (இரு படிகளில்) அனுப்பி வைக்க வேண்டும்.

## திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், **3** ஆம் விதியின், துணை விதி **(1)**–இல், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

'' ஆனால், படிவம் A–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியலில் வைத்துவரப்பட வேண்டிய விவரங்கள், ஏனைய யாதொரு தொழிலாளர் சட்டத்தின் கீழ் வேலையளிப்பவரால் வைத்து வரப்படும் ஏனைய யாதொரு பதிவுருக்களில் இருக்குமாயின், தனியாக படிவம் A–இல் தற்காலிக பணியாளர் வருகைப் பட்டியல் வைத்துவரத் தேவையில்லை.''.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை(நிலை) எண். 40, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 25.02.2020]*

தமிழ்நாடு **1972** ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **36/1972**) **41** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1973** ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார் . அவையாவன:—

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில், **29** ஆம் விதியின் துணை விதி **(1)** – இல்,

(1) பகுதி (a) – இல், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:''
ஆனால், படிவம் B - இல் வைத்துவரப்படவேண்டிய விவரங்கள், ஏனைய யாதொரு தொழிலாளர் சட்டத்தின் கீழ் வேலையளிப்பவரால் வைத்து வரப்படும் ஏனைய யாதொரு பதிவுருக்களில் இருக்குமாயின், தனியாக படிவம் B–இல் பதிவேடு வைத்துவரத் தேவையில்லை.'',.

(2) பகுதி (b) – இல், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

''ஆனால், படிவம் C இல் வைத்து வரப்படவேண்டிய விவரங்கள், ஏனைய யாதொரு தொழிலாளர் சட்டத்தின் கீழ் வேலையளிப்பவரால் வைத்து வரப்படும் ஏனைய யாதொரு பதிவுருக்களில் இருக்குமாயின், தனியாக படிவம் C-இல் பதிவேடு வைத்துவரத் தேவையில்லை.'',.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்,
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண்.41, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள்: 25.02.2020]*

தமிழ்நாடு **1981**ஆம் ஆண்டு தொழிலக நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர நிலையை அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **46/1981**) 10ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு **1981**ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்த நிலையை அளித்தல்) விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், **6**ஆம் விதியைச் சேர்ந்த, **(1)**–ஆம் துணை விதியில் பின்வரும் வரம்புநிபந்தனை சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்:–

''இருப்பினும், ஏனைய யாதொரு சட்டத்தின் கீழ், வேலையளிப்பவரால் வேறு ஏதேனுமொரு பதிவுருக்களில், படிவம்–Iஇல் பராமரிக்க வேண்டிய தேவையான விவரங்கள் இருக்குமானால் அப்படிவத்தில் தனியாக பதிவேடு பராமரிக்க வேண்டிய அவசியமில்லை''.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்,
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 25.02.2020]*

தமிழ்நாடு **1981**ஆம் ஆண்டு பிழைப்பூதியப்படி வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **43/1981**) **12**ஆம் பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு **1981**ஆம் ஆண்டு பிழைப்பூதிய வழங்கல் விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், விதி **3**–இல், (iii)–ஆம் பகுதியில் பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்:–

''இருப்பினும், ஏனைய யாதொரு சட்டத்தின் கீழ், வேலையளிப்பவரால் வேறு ஏதேனுமொரு பதிவுருக்களில், படிவம்–Iஇல் பராமரிக்க வேண்டிய தேவையான விவரங்கள் இருக்குமானால் அப்படிவத்தில் தனியாக பதிவேடு பராமரிக்க வேண்டிய அவசியமில்லை''.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்,
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை*

*[அரசாணை (நிலை) எண்.87, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 20.04.2020]*

தமிழ்நாடு **1961** ஆம் ஆண்டு பேறுகால நலச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **53/1961**) **28** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு **1967** ஆம் ஆண்டு பேறுகால நல விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தம், இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் **28** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் கோரியுள்ளவாறாக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கால அளவு முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பின்வரும் வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை ''சென்னை – **600 006**–இல் உள்ள தொழிலாளர் துறை ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – **600 009** என்ற முகவரிக்கும், எண்.**47/1**, சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், கிண்டி, தொழிற்பேட்டை, சென்னை–**600 032** என்ற முகவரியில் அமைந்துள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநருக்கும் (இரு படிகளில்) அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில் ,–

(i) **6** ஆம் விதிக்குப் பின்னர், பின்வரும் விதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது ;–

"**6–A. குழந்தைகள் காப்பகம்.– (1)** ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட ஒவ்வொரு நிறுவனத்திலும், பெண் பணியாளர்களின் குழந்தைகளின் பயன்பாட்டிற்காக வேலை அளிப்பவரால் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

ஆறு வயதுக்கு குறைவாக உள்ள ஒவ்வொரு முப்பது குழந்தைகளுக்கும் ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்க வேண்டும்.

**(2) அமைவிடம்.–** குழந்தைகள் காப்பகமானது, குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளின் தாய்மார்கள் எளிதில் அணுகும் வகையில் நிறுவனத்தின் முதன்மை வாயிலிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் அதிக இரைச்சல் அல்லது தூசி/புகை/ துர்நாற்றம் அல்லாத இடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

**(3) கட்டடங்கள்.–** (a) குழந்தை காப்பகத்தின் இடவசதியில், தளபரப்புப் பகுதி ஒவ்வொரு குழந்தைக்கும் 1.5 சதுர மீட்டருக்கு குறையாமலும், மேற்கூரை உயரம் தளத்திலிருந்து 3.7 மீட்டருக்கு குறையாமலும், வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் மற்றும் நீர் புகாத பொருட்களாலும், தீயணைப்பு சாதன வசதியுடன் அமைந்திருக்க வேண்டும்.

(b) போதிய வெளிச்சத்துடனும், காற்றோட்டத்துடனும் இருக்க வேண்டும்.

(c) அவசரத் தேவைக்கான கூடுதல் மின்சார வசதியுடன், செயற்கை ஒளிவிளக்குகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(d) சுத்தமாகவும், சுகாதாரமான முறையிலும் பராமரிக்கப்பட வேண்டும்.

(e) குழந்தைக் காப்பகம் அமைந்துள்ள கட்டடமானது, சிறந்த கட்டட தளப்பரப்புடன் கூடிய கட்டுமானத்துடன் அமைந்திருக்க வேண்டும்.

**(4) பணியாளர்.–** (a) குழந்தைகள் காப்பகத்திற்கு குழந்தைப் பராமரிப்பில் தகுதி பெற்ற மற்றும் பயிற்சி பெற்ற ஒரு பெண் ஆசிரியை – காப்பாளர் பணியமர்த்தப்பட வேண்டும்.

(b) மகப்பேறு பார்ப்பதில் தகுதி வாய்ந்த மற்றும் பயிற்சி பெற்ற குழந்தைக் காப்பக உதவியாளர் (பெண் ) ஒருவர்

(c) ஒவ்வொரு 10/15 குழந்தைகளுக்கும் ஆயா ஒருவர்.

**(5) வசதிகள்.–** (a) தேவையான அறைகலன்களுடன் தொட்டில்கள், பொம்மைகள், தரை விரிப்புகள், படுக்கைகள், தலையணைகள், பருத்தி போர்வை, குழந்தைகளுக்கு உணவு ஊட்டுவதற்கு தேவைப்படும் பாத்திரங்கள், ரப்பர் விரிப்பு மற்றும் கொசுவலைகள் ஆகியவற்றை குழந்தைகள் காப்பகம் கொண்டிருக்க வேண்டும்.

(b) பெரிய குழந்தைகளுக்கான சறுக்குப் பலகை, ஏற்ற இறக்க விசை விளையாட்டு வசதி, ஊஞ்சல் மற்றும் பொம்மைகள் போன்ற தேவையான விளையாட்டுப் பொருட்களுடன் உரியவாறு வேலியிடப்பட்ட நிழலான திறந்தவெளி விளையாட்டு திடலுக்கு வகைசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

(c) சமையல் செய்வதற்கும் உணவு படைப்பதற்குமான பாத்திரங்கள் மற்றும் அடுப்புடன் கூடிய சமையலறைக்கு வகைசெய்யப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத நேர்வில், வேலையளிப்பவர் சுகாதார முறையில் உணவு/குடிநீர் கிடைப்பதற்கு வகைசெய்ய வேண்டும்.

(d) முறை மாற்றுப் பணியில் நாளொன்றுக்கு 8 மணி நேரத்திற்கு மிகாமல் முறை மாற்றுப் பணிகளில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்காக ஏழு நாட்களில் 24 மணி நேரமும் குழந்தைகள் காப்பகம் திறந்து வைக்கப்பட வேண்டும்.

(e) சுத்தமான நீரை சேமிப்பதற்கான போதிய ஏற்பாடுகளுடன் பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் வசதிக்கு வகைசெய்யப்பட வேண்டும்.

(f) சுத்தமான சுகாதாரமான தூய்மையான பால் (கிடைக்குமெனில்) அல்லது சான்றளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை மருத்துவரால் ஒப்புதலளிக்கப்பட்ட பால் பவுடர். ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தது 0.3 லிட்டர் பால் கிடைக்குமாறு வகைசெய்யப்பட வேண்டும். இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சத்துணவுக்கு வகைசெய்யப்பட வேண்டும்.

(g) பணியில் உள்ள குழந்தைகள் காப்பக பணியாளர்களுக்கு தூய்மையான ஆடை/சீருடை வழங்கப்பட வேண்டும்.

**(6). கழிப்பறை.–** (a)குழந்தைகள் காப்பகத்தின் உள்ளே அல்லது அதனையொட்டி குழந்தைகளுக்காக தகுந்த தனி கழிப்பறை இருக்கப்பட வேண்டும்.

(b) குளியலறையை ஒட்டி ஒவ்வொரு 20 குழந்தைகளுக்கும் தனி கழிப்பறையும், பணியாளர்/தாய்மார்களுக்காக தனி கழிப்பறையும் போதிய தண்ணீர் வசதியுடனும், கழிவறையை தூய்மை செய்யும் பொருட்களுடன் சுகாதாரமான முறையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(c) நிருவாகம், சுத்தமான துணித்துண்டுகள், எண்ணெய் மற்றும் சோப்புகளை வழங்க வேண்டும்.

**(7) மருத்துவ ஏற்பாடுகள்.–** (a) முதல் உதவிப் பெட்டி வழங்கப்பட வேண்டும்.

(b) குழந்தைகளை சேர்ப்பதற்கு முன்னர் மருத்துவ பரிசோதனையும், குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கு மாதாந்திர மருத்துவ பரிசோதனையும் தகுதி வாய்ந்த மருத்துவரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**(8) பதிவுருக்களை வைத்து வருதல்.–** புகார்களுக்கான பதிவேட்டுடன், குழந்தைகள் காப்பகத்தில் சேருகின்ற குழந்தைகளின் விவரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்றினை நிருவாகம் வைத்து வர வேண்டும்.

**(9) வேலையளிப்பவரால் கண்காணிக்கப்படுதல்.–** வேலையளிப்பவரால் அல்லது வேலையளிப்பவரின் பிரதிநிதியால் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குழுந்தைகள் காப்பகம் முறையாக கண்காணிக்கப்பட வேண்டும்.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்,
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.